இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE
Pelawatta, Battaramulla

Telephone: 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206.
Fax: 011-2785220
POSTAL ADDRESS: P.O.Box 1503 Colombo
Internet Address: www.doenets.lk
E-mail: exams@sltnet.lk

My No: 6/8/AL/RS/2025
Your No: ..................
Date: 2026.09.15

---

சகல அதிபர்களுக்கும்,

**க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை, க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணையையும் சான்றிதழ்களையும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக**

மேற்படி விடயம் தொடர்பாக, ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் மேற்குறித்த பரீட்சைகளின் மீள்பரிசீலனைப் பெறுபேறுகள் வழங்கப்படும் வேளையில் தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணையும் சான்றிதழ்களும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

02. இவ்வாறு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற தனிப்பட்ட பெறுபேற்றுச் சான்றிதழானது முறையாக மாணவர்களிடத்தே வழங்கப்படவில்லை என கணக்காய்வுப் படிவங்கள் மூலம் தெரியவருகின்றது. எனவே எதிர்காலத்தில் தங்களால் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பெறுபேற்று அட்டவணை / சான்றிதழ்களுக்குரிய தகவல்களை கணக்காய்வு நடவடிக்கைகளின் விசாரணைகளுக்குப் பதில் வழங்க வேண்டியிருப்பதால் தகவல்களை பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

03. அதற்கமைய சகல அதிபர்களும் https://onlineexams.gov.lk/ என்ற இணைப்பில் உள்நுழைந்து, வழங்கப்பட்ட பயனர்பெயர் (User Name), கடவுச்சொல் (Password) ஆகியவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை / சான்றிதழ்கள் தொடர்பான புள்ளிவிபரவியற் தகவல்களை ஒரு மாதத்திற்குள் நிகழ்நிலையில் உள்ளிட வேண்டும். அவ்வாறு உள்ளீடு செய்த பின்னர் தரவிறக்கம் செய்யப்பட்ட அச்சிடப்பட்ட PDF கோவை பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தி அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

04. க.பொ.த. (உ.தர), க.பொ.த. (சா.தர) ஆகிய பரீட்சைகளின் தனிப்பட்ட பெறுபேற்று அட்டவணையின் பின்பக்கத்தில் உங்களது கையொப்பம் மற்றும் பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தியும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மாணவர்களின் சான்றிதழை உடனடியாக வழங்கவும்.

05 அதற்கமைய, மாணவர்களின் பெறுபேற்று அட்டவணை/சான்றிதழ்களை விநியோகிக்காமல் இருப்பது, தாமதப்படுத்துவது மற்றும் தரவுகளைத் தவறாகப் பதிவு செய்வது ஆகியவற்றுக்கு அதிபர்களே முழுப் பொறுப்பாவார்கள்.

விசாரணைகள்: தொலைபேசி எண்கள் - 0112785922, 0112784537, 0112786616, 0112784208
மின்னஞ்சல் - gcealexam@gmail.com

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்